தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1979 பிப்ரவரி 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) அறிவிப்புகள்.

(அ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகப் பேரவைத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகப் பேரவைக்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகம் கோரியுள்ளது.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 17-2-79 சனிக்கிழமை மாலை 3 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 19-2-79 திங்கட்கிழமை காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 20-2-79 செவ்வாய்க்கிழமை பகல் 1 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது ஓர் இடத்திற்கு மேற்படுமாயின் 22-2-79 வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

---

(2) ஒழுங்குப் பிரச்சினை.

மத்திய அரசு அனுப்பிய அறிக்கை தமிழில் இல்லாதது குறித்து.

*திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். நேற்றையதினம் சட்டமன்றத் துறை மூலமாக "Guidelines for signing verification certificates for Passports" என்ற குறிப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. அது ஆங்கிலத்திலும்